**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 270 /2023**

**Deposition of P.W.** 3

Name : திரு. சைலின் ஜெப சுபின்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:21.01.2026

Accused Produced.

முதல் விசாரணை–

நான் தற்போது வடசேரி காவல்நிலையத்தில் தலைமைக்காவலவராக பணியாற்றி வருகிறேன். 19.06.2023ம் தேதி திருவட்டார் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வந்த போது நெய்யூரை சேர்ந்த சிவகுமார் என்பவர் சார்பு ஆய்வாளர் திரு. ரமேஷ் அவர்களிடம் முளகுமூடு அருகே உள்ள நிங்காரவிளை என்ற இடத்தில் எதிரி ரவீந்திரன் நாயர் விபச்சார தொழில் செய்வதாக தகவல் சொன்னார். பின்னர் இது குறித்து காவல் ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்து விட்டு உதவி ஆய்வாளருடன் நானும், பெண்முதல்நிலை காவலர் திருமதி. ஷீஜா, திருமதி. ராகி ஆகியவர்கள் முளகுமூடு நிங்காரவிளை அனிதா என்பவரது வீட்டில் வைத்து விபச்சாரம் நடந்ததாக சொன்னார்கள். அங்கு சென்ற போது ரவீந்திரன் நாயர் அனிதாவின் வீட்டின் முன்பு நின்று

கொண்டிருந்தார். வீட்டினுள் சென்ற போது சக்தி மற்றும் ஷோபா ஆகிய இரு பெண்கள் அரைகுறை ஆடையுடன் இருந்தார்கள். மேற்படி இருவரும் எதிரி அவர்களை வைத்து விபச்சார தொழில் செய்வதாக கூறினார்கள். ரவீந்திரன் நாயர் விபச்சார தொழில் செய்வதை ஒப்புக்கொண்டார். ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த வீட்டிலிருந்து 4 பாக்கெட் நீரோத் கைப்பற்றப்பட்டது. அத்தாட்சியில் நானும் முதல்நிலை காவலர் ஷீஜாவும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.6. பின்னர் எதிரியை நிலையம் கொண்டு வந்தோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சிவகுமார் எழுத்து மூலமாக புகார் கொடுக்கவில்லை. சிவகுமார் எதிரி பாலியல் தொழில் நடத்துவதை நேரில் பார்த்தாக கூறவில்லை. ஆனால், விபச்சாரத்தொழில் செய்வதாக சொன்னார். சிவகுமார் சொன்ன உடன் வழக்கு பதிவு செய்யவில்லை. ஆய்வாளரிடம் எழுத்து பூர்வ உத்தரவு பெறவில்லை. சோதனை சம்மத கடிதம் பெற்ற பிறகு சோதனை செய்வோம் என்றால் சரிதான். எதிரியின் வீட்டை சோதனை செய்வதற்கு முன்னர் சம்மத கடிதம் பெறவில்லை. நாங்கள் சோதனை செய்த போது பெண்களுடன் ஆண்கள் யாரும் இருக்கவில்லை. பெண்கள் பாலியல் தாக்குதல் நடத்தியதாக எங்களிடம் கூறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பெண்கள் வாக்குமூலம் கொடுக்கவில்லை அதை நாங்கள் பதிவும் செய்யவில்லை. பாலியல்தாக்குதல் எதுவும் நடக்காததால் அந்த பெண்கள் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. விபச்சால தடுப்பு சட்டப்படி காவல்ஆய்வாளர் நிலைக்கு குறையாத நபர் ஆய்வு செய்ய

வேண்டும் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் படி நிலைக்கு குறையாத பெண் காவல் ஆய்வாளர் பாதிக்கப்பட்ட பெண்களை விசாரணை செய்ய வேண்டுமென்றால் சரிதான். அத்தாட்சியில் சான்று பொருள் எந்த இடத்தில் வைத்து கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பாலியல் தொழில் நடந்ததற்கான தடயங்கள் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் பாலியல் தொழில் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ வீட்டின் அருகே இதர வீடுகளும் உள்ளன. அருகில் இருந்த வீடுகளிலிருந்து யாரும் புகார் கொடுக்கவில்லை. சான்று பொருள் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. பாதிக்கப்பட்ட பெண்களை சாட்சியாக விசாரிக்கவில்லை. பெண்கள் எதிரி பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியதாக எவ்வித வாக்குமூலமும் கொடுக்கவில்லை.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 270/2023**

**Deposition of P.W.** 4

Name : திருமதி ஷீஜா

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 21.01.2026

Accused Produced.

முதல் விசாரணை–

நான் தற்போது பளுகல் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றிய போது 19.06.2023ம் தேதி மதியம் 02.00 மணிக்கு சிவகுமார் என்பவர் நிலையம் வந்து நிங்காரவிளையில் அனிதா வீட்டில் விபச்சாரம் நடப்பதாக தகவல் சொன்னார். அங்கு சார்பு ஆய்வாளர் திரு. ரமேஷ் அவர்களுடன் சைலின் ஜெயசுபின், ராகி மற்றும் நான் சென்ற போது அனிதா வீட்டின் முன்பு எதிரி ரவீந்திரநாயர் நின்று கொண்டிருந்தார். அவரிடம் தகவல் சொல்லி வீட்டை சோதனை செய்தோம். அப்போது

வீட்டில் ஷோபா. சக்தி என்ற இருபெண்கள் இருந்தார்கள். அவர்கள் இருவரையும் விசாரித்த போது விபச்சாரம் செய்வதாக ஒப்புக்கொண்டார்கள். எனவே, எதிரியுடன் சேர்த்து அந்த பெண்களையும் அழைத்து வந்தோம். சோதனை செய்த வீட்டிலிருந்து 4 பாக்கெட் நீரோத் கைப்பற்றினோம். அத்தாட்சியில் நானும் கையொப்பம் செய்தேன். என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

சிவகுமார் கொடுத்த புகார் தகவலின் படி தான் சம்பவ இடத்திற்கு போனோம். வீட்டிலிருந்த பெண்களுடன் ஆண்கள் யாரும் அப்போது பாலியல் தொழிலில் ஈடுபடவில்லை. சிவகுமாரும் பாலியல் தொழிலை நேரில் பார்த்ததாக புகார் கொடுக்கவில்லை. அருகில் உள்ள வீட்டிலிருந்தும் யாரும் புகார் கொடுக்கவில்லை. சம்பவ நாளுக்கு முன்னர் வரை யாரும் புகார் கொடுக்கவில்லை. பொதுவாக சோதனை சம்மத கடிதம் கொடுத்து தான் வீட்டை சோதனை செய்ய வேண்டும். எதிரியின் வீட்டை சோதனை செய்ய சம்மத கடிதம் கொடுக்கவில்லை. விபச்சார தடுப்பு சட்டப்படி காவல் ஆய்வாளருக்கு தான் சோதனை அதிகாரம் உள்ளது. வீட்டை சோதனை செய்யும் போது ஆய்வாளர் வரவில்லை. ஆய்வாளர் எழுத்து பூர்வ உத்தரவும் கொடுக்கவில்லை. பாதிக்கப்பட்ட பெண்களை பெண் காவல் ஆய்வாளர் தான் விசாரித்திருக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்கள்

என்னிடம் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை. பாதிக்கப்பட்ட பெண்களை மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து செல்லவில்லை. எதிரி பெண்களிடம் பாலியல் தாக்குதல் செய்ததாகவோ வேறு ஆண்களை அழைத்து வந்ததாகவோ அந்த பெண்கள் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை. சான்று பொருளை எதிரி ஆஜர் படுத்தியதாக அத்தாட்சியில் குறிப்பிடவில்லை. அந்த பெண்களை இந்த வழக்கில்சாட்சியாக சேர்க்கவில்லை. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 270/2023**

**Deposition of P.W.** 5

Name : திருமதி . ராகி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 21.01.2026

Accused Produced.

முதல் விசாரணை–

நான் தற்போது மார்த்தாண்டம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றிய போது 19.06.2023ம் தேதி மதியம் 02.00 மணிக்கு சிவகுமார் என்பவர் நிலையம் வந்து நிங்காரவிளையில் அனிதா வீட்டில் விபச்சாரம் நடப்பதாக தகவல் சொன்னார். அங்கு சார்பு ஆய்வாளர் திரு. ரமேஷ் அவர்களுடன் சைலின் ஜெயசுபின், ஷீஜா மற்றும் நான் சென்ற போது அனிதா வீட்டின் முன்பு எதிரி ரவீந்திரநாயர் நின்று கொண்டிருந்தார். அவரிடம் தகவல் சொல்லி வீட்டை சோதனை செய்தோம். அப்போது

வீட்டில் ஷோபா. சக்தி என்ற இருபெண்கள் இருந்தார்கள். அவர்கள் இருவரையும் விசாரித்த போது விபச்சாரம் செய்வதாக ஒப்புக்கொண்டார்கள். எனவே, எதிரியுடன் சேர்த்து அந்த பெண்களையும் அழைத்து வந்தோம். சோதனை செய்த வீட்டிலிருந்து 4 பாக்கெட் நீரோத் கைப்பற்றினோம். என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

சிவகுமார் கொடுத்த புகார் தகவலின் படி தான் சம்பவ இடத்திற்கு போனோம். வீட்டிலிருந்த பெண்களுடன் ஆண்கள் யாரும் அப்போது பாலியல் தொழிலில் ஈடுபடவில்லை. சிவகுமாரும் பாலியல் தொழிலை நேரில் பார்த்ததாக புகார் கொடுக்கவில்லை. அருகில் உள்ள வீட்டிலிருந்தும் யாரும் புகார் கொடுக்கவில்லை. சம்பவ நாளுக்கு முன்னர் வரை யாரும் புகார் கொடுக்கவில்லை. பொதுவாக சோதனை சம்மத கடிதம் கொடுத்து தான் வீட்டை சோதனை செய்ய வேண்டும். எதிரியின் வீட்டை சோதனை செய்ய சம்மத கடிதம் கொடுக்கவில்லை. விபச்சார தடுப்பு சட்டப்படி காவல் ஆய்வாளருக்கு தான் சோதனை அதிகாரம் உள்ளது. வீட்டை சோதனை செய்யும் போது ஆய்வாளர் வரவில்லை. ஆய்வாளர் எழுத்து பூர்வ உத்தரவும் கொடுக்கவில்லை. பாதிக்கப்பட்ட பெண்களை பெண் காவல் ஆய்வாளர் தான் விசாரித்திருக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்கள் என்னிடம் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை. பாதிக்கப்பட்ட பெண்களை மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து செல்லவில்லை. எதிரி பெண்களிடம் பாலியல் தாக்குதல் செய்ததாகவோ வேறு ஆண்களை அழைத்து வந்ததாகவோ அந்த பெண்கள் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை. சான்று பொருளை எதிரி ஆஜர் படுத்தியதாக

அத்தாட்சியில் குறிப்பிடவில்லை. அந்த பெண்களை இந்த வழக்கில்சாட்சியாக சேர்க்கவில்லை. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.